
தொழில் விஞ்ஞான பூர்வமான தொழில்



இன்றைய சீவல் தொழிலாளியும்,
ஒய்வுபெற்ற ஆசிரியருமான
திரு. ஆசிர்வாதம் அவர்கள்
கூறும் கருத்து உள்ளே!

**அதிசயம்,**
**ஆனாலும் உண்மை!**

# கற்பகம்

கார்த்திகை - 1989
விலை: ரூ. 4-00

# கற்பகம்

கார்த்திகை

1989

*மலர் — 10*

*இதழ் — 5*

வெளியீடு :
வடமாகாண
தெ,ப. பொ. கூட்டுறவு
சங்கங்களின் சமாஜம்,
330, கே,கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22713

ஆசிரியர்;

கே. வி. நடராஜன்

*அச்சாளர்கள் :*

உமா பிறிண்ட்டேர்ஸ்
*32,*
நல்லூர் குறுக்கு வீதி
நல்லூர்.


# நல்ல திருப்பம்

ஆண்டான் அடிமைகள் செய்யும் சீவல் தொழில் - அவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்றெல்லாம் காலம் காலமாக பேசப்பட்டும் – சமூக அந்தஸ்து மறுக்கப்பட்டும் வந்ததை நாமெல்லோரும் நன்கு அறிவோம். அதனால் சீவல் தொழில் செய்வதற்கு அச்சமூகத்தின் இளம் சந்ததியினர் கூட முன்வராமல் வேற்றுத் தொழில்களில் நாட்டம் கொண்டுள்ளதால் அத்தொழிலும், தொழிலாளரும் வெகுவிரைவில் அருகிப் போய்விட்லாம் என்ற அச்ச உணர்வு கல்விமான்கள் மத்தியில் மேலோங்கி நிற்பதையும் நாம் நன்கு அறிவோம்.

ஆனல் நல்லதொரு திருப்பம், அதை நாம் போற்றத்தான் வேண்டும், எமது அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் திரு. ச. ஆசீர்வாதம் அவர்கள் விபத்துக்குட்பட்டதை அறிந்து பார்வையிடச் சென்ற சமயம் அந்த மாபெரும் உண்மையும் தெரியலாயிற்று. திரு. ஆசீர்வாதம் அவர்களே பெருமகிழ்வுடனும் - மிகப் பெருமையுடனும் கற்பகத்திற்கு பேட்டியும் தந்துள்ளார்.

பெருமைக்குரிய திரு. ஆசீர்வாதம் அவர்கள் உயர்குடிப் பிறப்பில் வந்துதித்த மனிதர் அதிலும் நீண்ட காலம் ஆசிரியத் தொழில் பார்த்து ஓய்வு பெற்ற சிறந்த கல்விமானுங்கூட. எந்தத் தொழிலையுமே செய்ய வேண்டிய அவசரமோ, அவசியமோ இல்லாத வாழ்க்கை வசதிகள் உள்ளவர். அந்துடன் ஒரு சிறந்த ஓவியர். அவருடைய ஓவியக் கூடத்தைப் பார்த்தாலே அந்த உண்மை புலப்படும். அவ்வாறான கல்விமானும், கலைஞருமான இந்த உயர்ந்த மனிதன் தனது கடைசிக் காலத்தில் (75 வயதில்) சீவல் தொழிலை மேற்கொண்டு வருகின்றார் என்றால் பலரால் நம்ப முடியாதுதான். ஆனாலும் இது உண்மை.

சீவல் தொழில் ஒரு விஞ்ஞான பூர்வமான தொழில். இத்தொழில் தேசிய ரீதியாக வளராமைக்கான காரணத்தையும் விளக்கி, இத்தொழில் செய்வதால் எந்த வெட்கமும் இல்லை என்றும் பெருமையுடனும் மகிழ்வுடனும் கூறும் திரு. ஆசீர்வாதம் அவர்கள் இத்தொழிலை மேற்கொண்டுள்ளதுடன் அத்தொழிலை மேன்மைப்படுத்தும் விதத்தில் சீவல் தொழில் ஒரு விஞ்ஞானத் தொழிலென்றும் கூறிவதிலிருந்து தமிழ் சமூகத்தில் இத்தொழிலுக்கும், தொழிலாளருக்கும் இது காலவரை ஏற்பட்டிருந்த சாபத்திடுகளுக்கு ஒரு சாபவிமோசனம் அளிப்பது போன்றுள்ளதல்லவா அவர் கூறிவது.

# அதிசயம், ஆனாலும் உண்மை.

அதிசயம், ஆனாலும் உண்மை

யாழ்ப்பாண சமூக அமைப்பில் இதுவரை என்றுமே நடந்திருக்காத - கற்பனை கூட செய்து பார்க்க முடியாத இந்த நிகழ்வினை உயர் குடிப் பிறப்பான திரு. ஆசீர்வாதம் என்ற பெரியார் நிகழ்த்திக் காட்டி சீவல் தொழிலுக்கு ஒரு மகத்துவத்தை ஏற்படுத்தி இருப்பதுடன், பரம்பரை பரம்பரையாக சீவற் தொழிலை மேற்கொண்டு வருபவர்களையே வெட்கித் தலை குனிய வைக்கும் விதத்தில் அவருடைய குடும்பப் பெருமைகளையும் பார்க்கும் போது இப்படியும் நடக்குமா - நம்பக்கூடிய சங்கதியா என்றெல்லாம் அங்கலாய்ப்பதும் அதிசயப்படுவதும் இயல்பானதே.

ஆனாலும் இது உண்மை. சத்தியமான உண்மை. நடந்திருக்கின்றது. இன்றும் திரு, ஆசீர்வாதம் அவர்கள் சீவிக் கொண்டேதான் இருக்கின்றார்.

அவர் பற்றிய விபரத்தை அறிய நீங்கள் அவசரப்படுவது எனக்குத் தெரிகின்றது. இது நாள் வரை ஏன் இந்த அதிசயத்தை கற்பகத்தில் எழுதவில்லை என்ற உங்கள் இயல்பான கேள்வியும் இங்கே என் காதில் விழுகின்றது. எதற்கும் வேளை வர வேண்டாமா? மரத்திலிருந்து கள் இறக்க ஏறிய போது விபத்துக்குட்பட்ட திரு, ஆசீர்வாதம் அவர்களின் விபத்தையும் விபத்துச்சம்பந்தமாக ஏற்பட்டபாதிப்பினையும் பார்வையிடச் சென்ற எமது சமாச விபத்துக் குழுவின், பிரதிநிதிகளில் ஒருவரான திரு வே. ஜேசுதாசன் அவர்கள் பிரத்தியேகமான முறையில் கற்பகத்திற்காக சில கேள்விகளைக் கேட்டு அதனை கேள்வி பதில் ரூபத்தில் சுவைபட இங்கே தருகின்றார்.

இனி வாசியுங்கள்: இன்னொன்று. 'இதையும் முதலிலேயே இங்கு சொல்லி வைத்தால்தான் இப் பேட்டி கற்பனையல்ல உண்மையே என்பதனையும் நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள்.

திரு. ஆசீர்வாதம் அவர்கள் அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் நீண்டகால அங்கத்தவர். வயது 75 இன்றும் தொழிற்படுகின்றார். இவர் ஓர் பயிற்றப்பட்ட ஆசிரியராயிருந்து ஒய்வு பெற்றவர். வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர். பிறப்பு நாரந்தனை. வசிப்பிடம் அரியாலை. பெருமைக்குரிய

தொழில் துறைகளிலும், உத்தியோகங்களிலும், தூரதேசங்களிலுமாக இருக்கும் பிள்ளைகளின் பெருமைக்கு இப் பேட்டியை நாம் கற்பகத்தில் பிரசுரிப்பதால் இழுக்கு ஏற்படாதா என்ற கேள்விக்கு புன்னகைத்துக் கொண்டே பதிலளித்தபோது அந்தச் சிரிப்பிற்குள்ளேயே எல்லாம் அடங்கித்தெரிந்தது. எல்லாம் நான் அறிவேன் பிரசுரியுங்கள் என்ருர் அப்பெரியார் தொழிலை வைத்து சாதியை வகுத்து துடக்கு மனப்பான்மை காட்டுபவர்கள் இன்றும் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கிருர்கள். இவர்களின் அறியாமை இருளை அகற்றும் விதத்திலும் இத் தீபாவளித் திருநாளில் திரு, ஆசீர்வாதம் பெருந்தகையின் புகைப்படத்தினையும் கற்பகம் முகப்பு அட்டையில் பிரசுரித்து அன்னுரைக் கௌரவிப்பதிலும் கற்பகம் பெருமைப்படுகின்றது.

இதோ எனது கேள்விகளுக்கு திரு. ஆசீர்வாதம் அளித்த பதில்கள்.

கேள்வி 1;- தங்களுடைய பரம்பரை வம்சம் போன்ற விபரத்தினை கற்பகம் வாசகர்களுக்கும் மற்றும் சங்க அங்கத்தவர்களுக்கும் தெரியப்படுத்துவதில் ஏதாவது ஆட்சேபனை உண்டா?

பதில்;- உங்களது மன உந்தல்களை நான் நன்கு உணருகின்றேன், இருந்தும் எனது வரலாறு பற்றிய விபரத்தினை சுருக்கமாகத் தருவதில் பெருமகிழ்வே அடைகின்றேன்.

நான் ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள நாரந்தனை கிராமத்தினை பிறப்பிடமாகக் கொண்டவன். நான் 1914 -ம் ஆண்டு சித்திரை மாதம் பிறந்தேன். எனது 19 வது வயதில் ஆசிரிய சேவையில் ஈடுபட்டேன். நான் ஒரு பயிற்றப்பட்ட தமிழ்ஆசிரியராக 1933ம் ஆண்டிலிருந்து 57 -ம் ஆண்டு வரையான 25 வருடங்கள், நாரந்தனை சென். பீற்றேர்ஸ் கல்லூரியிலும், 1957-1959 வரையான இரண்டுவருடங்கள் கிளிநொச்சி சென் திரேசா பாடசாலையிலும் 1959-1962 வரையான மூன்று வருடம் அல்லைப்பிட்டி ருேமன் கத்தோலிக்க பாடசாலையிலும் கடமையாற்றி எனது 49 வது வயதில் அதாவது 1962-ம் ஆண்டு ஒய்வு பெற்றேன். இவ்வளவு சிறிய வயதில் ஒய்வு பெற்றமைக்கான காரணத்தை நீங்கள் அறிய

விரும்புவீர்கள். நான் ஆசிரியத் தொழிலில் இருந்து கொண்டும் விவசாயம் செய்து வந்தேன். இருந்தும் எனது முழு நேரத்தையும் விவசாயத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்ற ஆசையே மேலோங்கி இருந்தது. அதனுல் நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் வேலை, தோட்டத் தொழில் போன்றவற்றையும் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தாலும்ஓய்வுபெற்றேன், இத்தொழில்களில் நான் தொடர்ந்து ஐந்து வருடங்கள் ஈடுபட்டு, அதன் விளைவாக வரலாற்றில் இடம் பெறுவது போன்று வட இலங்கையில் முதன் முதலில் உருளைக்கிழங்கு உற்பத்தியை மேற்கொண்டு வெற்றி பெற்றவன் என்ற வகையில் மிகுந்த பெருமிதம் அடைகின்றேன்.

**கேள்வி 2:-** உங்கள் குடும்ப உறுப்பினர்கள் பற்றி அதாவது எத்தனை பிள்ளைகள். அவர்களின் முன்னேற்றம் பற்றி கூறுவதற்கு ஏதாவது தடையுண்டா?

**பதில்:** எனக்கு ஐந்து ஆண் பிள்ளைகளும் ஐந்து பெண்பிள்ளைகளும் உள்ளனர், எல்லோரும் விவாகம் ஆனவர்கள், முதலாவது மகன் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர், இரண்டாவது மகனும், மூன்ருவது மகனும் பிரபல வர்த்தக நிறுவனங்களை நடத்தி வருகின்றனர், யாழ். நகரில் உரிமையாளர்களாக இருக்கிறுர்கள். இதில் ஒருவர் கடந்த ஒன்றரை வருடங்களாக அவுஸ்திரேலியாவில் இருக்கின்ருர். நாலாவது மகன் லண்டனில் உள்ள மாக்ஸ் + ஸ்பென்சர் ஸ்தாபனத்தின் பணிப்பாளராக கிட்டத்தட்ட மாதம் 1500 ஸ்ரேலிங்பவுண் சம்பளத்தில் கடமையாற்றுகின்ருர். ஐந்தாவது மகன் அவுஸ்திரேலியாவில் ஆசிரியத் தொழில் செய்கின்ருர். எனது மூத்த மகள் தாரமிழந்தவர். அவர் தற்போது சிங்கப்பூரில் வசிக்கிருர். இவருடைய மூத்தமகள்ஆபிரிக்காவிலுள்ள சாம்பியாவில் வேலை பார்க்கிருர் இரண்டாவது மகள் கணவருடன் இலண்டனில் வாழ்கிருர்கள். மருகன் லண்டனில் டாடராக கடமை

யாற்றுகிறார். மூன்றாவது மகள் அவுஸ்திரேலியாவில் தனது கணவருடன் வாழ்கின்றார். இம் மருமகன் அங்கு மோட்டார் பொறியியலாளராக கடமையாற்றுகின்றார். நாலாவது மகள் தனது கணவருடன் லண்டனில் வாழ்கின்றார் இம்மருமகன் அங்கு வடிவமைப்பு பொறியியலாளராக அதாவது காற்றிலிருந்து யூரியாவை இயந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்யும் பொறியியல் வல்லுனராக கடமையாற்றுகின்றார். ஐந்தாவதுமகள் தனது கணவருடன் அவுஸ்ரேலியாவில் வாழ்கின்றார். இம்மருமகன் அங்குள்ள ஒரு தனியார் நிறுவனமொன்றில் கூலியாளாக கடமைபுரிகின்றார், இதற்கு மேல் எனது பேரப்பிள்ளைகளும் மேலை நாடுகளில் சிறப்புடன் வாழ்கின்றார்கள், இரண்டுபூட்டப் பிள்ளைகளும் உண்டு எனக்கு மாதாந்த ஓய்வூதியப் பணமும் கிடைக்கின்றது,

கேள்வி 3 :- இத்தனை வசதி வாய்ப்பு கிடைக்கப் பெற்ற நீங்கள் இந்த வயதிலும் கஷ்டமான இத்தொழிலை அதிலும் தீண்டத்தகாதவர் செய்யும் தொழில் என்று உங்கள் சமூகத்தால் விரும்பப்படாத அருவருக்கப்படும் இந்த சீவல் தொழிலை செய்வதற்கான ஆசை ஏன் ஏற்பட்டது?

பதில்:- இதை ஒரு விஞ்ஞான பூர்வமான தொழிலென்றே நான் கருதுகிறேன், இந்தத் தொழிலைச் செய்பவர்கள் ஒரு பின்தங்கிய சமூகம் என்றுகருதுவதால்தான் இது ஒரு தேசிய ரீதியிலான தொழிலாக வளராதுபோய்விட்டது என்பதை உணர்ந்தும் உண்மையிலேயே இத்தொழிலால் குறுகிய காலத்தில் கூடிய சம்பாத்தியத்தினைப் பெறலாமென நான் கருதுவதுடன் எதிலும் ஒரு முன் மாதிரியாக நான் நடந்து பழக்கப்பட்ட காரணத்தாலும் எனக்கு இத்தொழிலைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது 1980-ம் ஆண்டு தொடக்கம் அரியாலை தெ, ப. பொ. கூ. சங்கத்தில்அங்கத்தவராகச் சேர்ந்து இத்தொழிலைச் செய்து வருகின்றேன்.

கேள்வி 4:- சீவற் தொழிலை மேற்கொள்ளும் சமூகத்தினரையே உறுப்பினராகக் கொண்ட இச்சங்கத்தில் நீங்கள் அங்கத்தவராக இருப்பதில் உங்களுக்கு இயல்பாகவே ஏதாவது கசப்புணர்வுகள் ஏற்படுவதுண்டா அல்லது ஏற்படுத்தப்படுவதுண்டா?

பதில் ;- இப்படியான உணர்வுகளுக்கு நான்முன்னுரிமை அளிப்பதில்லை. எதுவானுலும் சரி எதையும் நான் முற்கூட்டியே திட்டமிட்டு செயலாற்றுபவன். எதற்கும் எதிர் நீச்சல் போடும் வல்லமை எனக்கு உண்டு என்ற முடிவின் பின்னரேயே இத் தொழிலைச் செய்ய முன்வந்தேன். இத்தொழிலைச் செய்யும் சமூகம் இது ஒரு சமூகத் தொழில் என்றும் எமது காலத்துடனேயே இது நின்று விடவேண்டும் என்று கருதி தாம் சீவுவதுடன் நிறுத்தி தங்கள் சந்ததியைத் தொடரவிடாமல் தடுத்துவைக்கும்பலரை நான் கண்ணுறுகிறேன். இதனுல் இவர்கள் தங்களது எதிர்காலச் சந்ததியினருக்கு தெரிந்தோ தெரியாமலோ தீங்கிழைக்கின்றனர் என்பது எனது கருத்தாகும். இதனை ஓரளவேனும் அறிவு உடையவனென்ற ரீதியில் இச்சமூகத்தின் நோக்கம் பிழையென வற்புறுத்தி எதிர் காலத்திலாவது இத் தொழில் தேசிய ரீதியிலும் விஞ்ஞான அடிப்படையிலும் வளர வேண்டுமென்ற சித்தாந்தத்திலேயே இதனை நான் செய்ய முன்வந்தேன். எனக்கு எனது ஓய்வூதிய வருமானம் எனது சீவியத்துக்குப் போதுமானது என்றுலும் இத் தொழிலைச் செய்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்

கேள்வி 5:- சாதாரண கல்வி அறிவு குறைந்தவர்கள் செய்யும் சீவத் தொழிலுக்கும், தங்கள் அறிவாற்றலுடன் கூடிய தொழிலுக்கு மிடையில் அதாவது தொழில் முறையில் ஏதாவது வித்தியாசங்களை மேற்கொண்டுள்ளீர்களா?

பதில் ;- எனக்குக் கூட அடிப்படையில் ஒரு சாதாரண சீவற் தொழிலாளிதான் துணையாக இருந்தார். அத்துடன் எனது தோட்டத்திலும், பண்ணையிலும் தொழிலாளர்களா

க அமர்த்தியவர்கள் சீவல்தொழிலாளர் சமூகத்தவரே. இதனுல் அவர்கள் மூலமாகவே நான் எனது சீவல் தொழில் அறிவைப் பெருக்கிக் கொண்டேன். பின்னர் 1980-ம் ஆண்டு சங்கத்தில் அங்கத்தவராகச் சோந்ததும் திரு. அரிய துரை என்ற எனது சக உறுப்பினர் மூலம் இத்தொழில் பற்றிய மிகை அனுபவத்தைப் பெற்றேன். எனது அனுபவத்தின் வாயிலாக சீவலுக்கு உரிய மரத்தின் நாற்றுகளை நாமே தெரிவுசெய்துஎமதுசொந்தவளவில் நட்டு பராமரித்து எதிர்காலத்தில் சீவல் தொழிலுக்கு உபயோகித்தால் அதில் பெரும் பலனுண்டு. இதற்கு உதாரணமாக, இப்படியாக வளர்க்கப்பட்ட மரத்தில் நான் நாளொன்றுக்கு (தென்னை) 12 போத்தல் வரை கள் இறக்குகின்றேன் எனது வயது மூப்புக் காரணமாக கூடிய அளவு மரங்கள் சீவமுடியாதுள்ளது. நான்கே மரங்கள் தான் சீவுகின்றேன். ஆயினும்வாராந்தம்கிட்டத்தட்ட ரூபா 1500/- வரையில் வருமானம் பெறுகின்றேன் இப்படி சொந்த வளவில் நாற்று நட்டு அம்மரங்களிலிருந்துகள்சீவுவதாயின்

a) கூடிய கள்ளைச் சீவலாம்.

b) நேரச் சிக்கனத்தை ஏற்படுத்தலாம்.

c) கூடிய பாதுகாப்புக் கருதி ஏணி மூலம் ஏறி கள் இறக்கலாம்,

d) எந்நேரமும் அணில், எலி போன்ற சத்துருக்களிடத்தி லிருந்து ஏற்படும் பாதிப்பினையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

எனவே எதிர்காலத்தில் இத் தொழிலைச் செய்பவர்கள் எனது வழியினைக் கையாண்டால் கூடிய பயனைப் பெறலாம் என்பது எனது அபிப்பிராயம்.

# மகிழ்வு கொள்வேன்

கி. சிவனேசன்

இக்கவிதை சங்கங்களின் 10-வது ஆண்டு நிறைவு விழாவின்போது கவிதைப் போட்டியில் முதலிடத்தை தட்டிக்கொண்டது இக்கவிதையில் கூறப்பட்ட செயல்பாடுகள் இதுவரையும் நடைமுறையில் சங்கங்களால் செய்யப்படவில்லை. இச்செயல்பாடுகளையே எமது புதிய கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. ரி, சபாரத்தினம் அவர்கள் செய்ய முன்வரவேண்டுமென சங்கங்களைக் கேட்டுள்ளார். எனவே எதிர்வரும் தொண்ணூறாவது ஆண்டிலாவது இச்செயல்பாடுகளைச் செய்து ஆணையாளரினதும் கவி ஆக்கம் செய்தவரினதும் கனவை நனவாக்க முயல்வோம்.

ஆ—ர்

நினைப்பவர் நெஞ்சில் என்றும்
நீங்காது நிறைந்து நின்று
தனைப்பல வழியில் இங்கு
தந்துமே உதவுகின்ற
பனையதன் புகழை நாமும்
பாடுவோம் கவியில் இங்கு!
அனைவரும் அறியும் வண்ணம்
அதன்புகழ் உரைப்போம் நன்கு!

நெட்டையாய் வளர்ந்ததோடு
நிகரிலா வயிரம் கொண்டு,
கட்டிடம் பலவும் கட்டி
களிப்புற்றே, நமது மக்கள்
இட்டமாய் வாழ்வதற்கு
உதவிடும் பனை மரத்தை
திட்டமிட்டே வளர்த்து
தினம் பயன் அடைவோம் இங்கு !

ஓலையோ ஆடு, மாட்டின்
உணவது ஆகும், அந்த
ஓலையே வீடு வேய
உதவிடும் இன்னும் சொன்னால்
ஓலையே பெட்டி, பாய்கள்
செய்திட உதவும் பனை
ஓலையின் மட்டைதானே
விறகுமாய் உதவும் கேளீர்.

ஈர்க்கினால் கயிறு செய்வோம்
சுழகுகள் தாமும் செய்வோம்!
ஈர்க்கினால் கூடை, தட்டு
திரியணை யாவும் செய்வோம்!

ஈர்க்கினுல் உறிகள் செய்வோம்!
இன்னும் நாம் பல பொருட்கள்
ஈர்க்கினுல் செய்து எங்கள்
இல்லத்தில் தொழில் வளர்ப்போம்!

இனித்திடும் கருப்ப நீரை,
இன்சுவை தரும் விதத்தில்
தனித்துவமான பனங்
கட்டியை, வெல்லம், கள்ளே
கனிவுடன் எமக்களிக்கும்
' கற்பகதருவை ' இங்கு
இனியும் நாம் மறக்கலாமோ?
வளர்த்திட வழிகள் செய்வோம்!

பனம் பழம் இனிது, அந்தப்
பனம் பழச்சாற்ருல் ஆகும்
பணுட்டதன் சுவை புதிது
பசியினைத் தீர்க்க வல்ல
பனங்கிழங் கொடியல், பிட்டு,
பாகு, நுங்கெனவாம், நல்ல
மனங்கவர் உணவை எல்லாம்
மகிழ்வுறப் பனை தந்திடுமே.

எத்தனையோ பொருட்களின்
பயன்களை எமக்களிக்கும்
அத்தனை பெருமை மிக்க
கற்பக தருவை, நாமும்
இத்தரை மீதில் நன்கு
வளர்த்திடப் பாடுபட்டால்
சத்தியம் எமது வாழ்வில்
சந்தோச நிலையுண்டாகும்!

பனை தரும் பயன்களாலே
பலப்பல பொருட்கள் செய்வோம்
மனைகளில் பெண்கள் தானும்
மகிழ்ந்திந்த தொழிலைச் செய்தால்,
அனைவரும் வேலை வாய்ப்பு
அடைந்திட வழி யுண்டாகும்!
அதனுல் எம் சமுதாயத்தின்
அல்லல்கள் அகன்றே போகும்!


அன்பர்கள், நண்பர்கள், உற்ருர். உறவினர், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
உள்ளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

உமா பிறிண்டேர்ஸ்

32, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.

வடக்கினில் வளரும் இந்த
வளமிகு தருவை, யாரும்
வளர்த்திட வழி வகுக்கா
நிலையது கண்டு தானே
வடக்கினில் உதித்த(து), தெங்கு
பனம் பொருள் சங்கம் ஒன்று
வாழ்த்துவோம்! அதன் பணிகள்
வளர்ந்திட நாமும் இங்கு.

சுயதேவை பூர்த்தி செய்து
சுகம் பல பெறுவதோடு
அயல்ந டு தமக்கும் நாங்கள்
ஆக்கிடும் பொருள்கள் கோடி,
நயம் பெறும் நோக்கத்தோடு
நாளும் நாம் அனுப்பிவைக்க
பயன் தரும் கூட்டுறவுப்
பாதை நல்வழி வகுக்கும்!

கூட்டுற வொன்றே எங்கள்
குறைகளைத் தீர்த்து, இந்த
நாட்டினர் உயர்வுக்காக
நல்வழி வகுக்கும் என்றே
பாட்டில் யான் உரைத்தவற்றை
பார்த்தவர் உணர்ந்தால், நானும்
ஈட்டிய வெற்றி என்றே
இதயத்தில் மகிழ்வு கோள்வேன்.

## கடமை

நாம் மட்டும் வாழாது மற்றவர்களையும் வாழவைப்பதற்குப் பெயர் கடமை. பலனை எதிர்பாராத உழைப்பே கடமை, மனிதனுகப் பிறந்தவன் தன்னுல் இயன்ற வரையில் அடுத்த ஜீவனுக்குக் கடமை செய்வதே மனிதப் பண்பு,

## புரதம்

நாம் மேலதிகமாக உண்ணும் மாப்பொருள், கொழுப் புணவுகள் எமது உடலில் சேமித்து வைக்கப்படுகின்றன. ஆனுல், மேலதிகமாக உண்ணும் புரத உணவும், சில வைட்டமின்களும் சேமிக்கப்படாமல், கழிவாக வெளியேற்றப்படுகின்றன. எனவேதான் ஒவ்வொரு நாளும் புரத உணவு உண்பது அவசியமாகின்றது, ஒரு மனிதனுக்கு நாளொன்றுக்கு 30 கிரும் புரதம் போதுமானது. அதற்கு மேல் உண்ணப்படும் புரத உணவு வெளியேற்றப்படுகின்றது. உலகில் புரத உணவே அதிக விலையுள்ளது. பருப்பு வகை, பால், முட்டை, இறைச்சி, மீன் என்பவற்றில் புரதம் அதிகளவில் கிடைக்கின்றது.

தொடர் நவீனம்

அத்தியாயம் → 8

# உண்மையில்லாத உறவுகள்

கே. வி. என்.

கதையாச்சுவல்லோ உங்கடை இரண்டுபேற்றை கதையும் கிடக்கு. உந்தச் சமியாப்பாடும், புளிச்சலே வறைக் கதையையும் விட்டிட்டு எழும்புங்கோ சாப்பிடலாம்.''

''நாங்கள் சும்மா முசுப் பாத்திக்கு கதைக்கிறம் அன்னம்''

''வீட்டுக்குள்ளை கிடந்ததை எடுத்து வைச்சுக் கொண்டோ சளசளக்கிறியள். பின்னைக் கேட் கவோவேணும். அண்ணைக்கு அந்த முசுப்பாத்தியெண்டால் வாய்க்கு வந்ததெல்லாங் கதை தானே. வாயும் உழையிறதில்லை. கத்திப் போட்டுச் செத்துப் போற மாரித் தவக்காய் மாதிரி சவக் கதையளையும் கதைச்சுக் கொண்டு.''

''சரி சரி, நான் வாறன்ரி ஆத்தை. என்னோடை என்னத் துக்குப் பொல்லாப்புக்கு வாறுய்? சீக்கரமா ஒண்டைப் பெத்துப் போடுங்கோ. காலம் பிந்திச் சுதோ. பெடியள் கை பறிஞ்சு விடுவாங்கள். சரி, நான் வரட் டுக்கா ஓல் சிலோன்.''

''இரும் சாப்பிட்டிட்டுப் போவம். அன்னமும் ஏதோ சொல்ல வாயெடுக்கிறுள்.''

''ஓமண்ணை இருங்கோ போகலாம். வீட்டு விசயமா ஏதோ தொடக்கத்திலை கதைச்சது மாதிரிக் கேட்டுது. எனியும் அதைப் பின் போட்டுக் கொண்டுபோறது நல்லதில்லையண்ணை.''

''அதைப்பற்றித்தானே இவ்வளவு நேரமும் உன்ரை விக்கிரமாதித்தமகா ராசாவுக்குக் கிட்ட சொல்லிக் கொண்டிருந்தன். அதுக்கிடையிலை நீயும் வந்திட்டாய். அப்ப சரி ஒரு நல்ல நாளாப் பார்த்து முளக் கட்டையை இறுக்க வேண்டியதுதானே.''.

''ஓ, அப்பிடித்தான் செய்ய வேணுமண்ணை. நெடுகப் பிள்ளையாருக்கு கலியாணம் கலியாணமெண்டு கடத்திக் கொண்டு போனது மாதிரி இதுகும் இழுபட்டுக் கொண்டு போகுது.'

''பேந்தென்ன அண்ணனும் தங்கையும் ஒரு மிக்கச் சொல்லையுக்கை அடுத்த ஞாயத் துக்கு இடமென்ன கிடக்கு? இப்ப என்னைத்தானே எல்லாத் துக்கும் குறை சொல்லுறியள். சரி நாளைக்கே......''

''ஓய், நாளைக் கென்ன காணும் நாளைக்கு. நாளைக்கு நா

ளைக்கு எண்டு நாள் கடந்து கொண்டு போறதையொழிய நடக்கப் போற தொண்டுமில்லை. இஞ்சைபார், ஒல் சிலோன் எந்தவொரு காரியத்தையும் நாளைக் கெண்ட கதைக்கே இடம் வைக்கக் கூடாது. அது என்ரை வாகடத்திலை ஒரு நாளும் நான் வைச்சுக் கொள்ளுறதில்லை. நாளையென்பதும், பின்னை, பிறகு பார்ப்பமென்பதும் ஒரு போதும் நடக்காத காரியங்களாம். இப்பவே, இந்தா துண்டை எடு, தோளிலை போடு, கிளம்பு. எல்லுப் போலை பொறடாப்பா. இஞ்சை கொண்டா அன்னம் ஒரு நுள்ளுப் பொயிலை. இண்டைக்கு நாளென்ன?

''திங்கட்கிழமை யண்ணை. சரி சாப்பிட்டிட்டுப் போங்கோவன்.''

''திங்கட்கிழமையா? ......ம்' சரி நல்ல நாள்தான், வீட்டு வேலை அரைவாசி முடிஞ்சமாதிரி. இப்பவே சாத்திரி வேலுப்பிள்ளையெட்டைப் போய் நில மெடுக்கிற அலுவலைப்பார்த்திட்டு வந்திடுவம். சாப்பிட்டிட்டுப் போவமோ, வந்து சாப்பிடுவமோ?

'' சாப்பிட்டிட்டேபோவம். கொண்டுவா அன்னம்''

## அத்தியாயம் → 9

கேட்டியோ அல்லி, வீட்டைக்கட்டிப் பார் கலியாணத்தை கட்டி வைச்சுப்பார், எண்டு அனுபவப்பட்டவங்கள் சொல்லுவாங்கள். அது ஏன் அப்பிடி சொன்னுங்கள் எண்டால் இரண்டும் நினைக்கிறது கெதியிலை நடக்காதெண்டிறதுக்காகத்தான் அப்பிடிச் சொல்லி இருக்கவேணும் கண்டியோ. எங்கடை சுறுக்கண் சந்தையா சுடுகுது மடியைப் பிடி எண்டிற கணக்கிலை கருமங்களைப் பார்க்கத் துடங்கினது உண்மைதான். ஆனுல் அவன்ரை வாய் வீச்சுக் கதையைப் போலை வீடு எழும்பவில்லை. எனெண்டு கேட்கிறியோ? காசுபணத்தாலை சுணக்கம் கிணக்கம் ஏற்பட்டதெண்டும் சொல்லேலாது, நாள் நட்சத்திரம் பார்த்தும்தான் அடிக்கல் நாட்டினதும். ஆனுலும் அது பத்திரிப்பு மட்டத்திற்கு மேலே ஒரு சாண்கூட வளர மறுத்துக் கிடந்தது. விஷயம் என்னெண்டாய்? அந்தப் பூண்டியுக்கைதான் குஞ்சரம் சனிச்சிருந்தாள். அன்னம் வாயிலும் வயித்திலுமாக இருந்ததாலை எல்லாம் அப்பிடி அப்பிடியே தம்மிட்டுப் போச்சு. பிறகு குஞ்சரம் பிறந்த பிறகுதான் வீடு கட்டி ஒப்பேத்தி முடிஞ்சிது.

குஞ்சரத்தின்ரை முப்பத்தொண்டை வெகு கோலாகலமாகக் கொண்டாட வேணுமெண்டு நிண்டு கொண்டான் எங்கடை

சுறுக்கன் கந்தையா. அவனுக்கு மருமகள் பிறந்து விட்டாளாம். அதிலை அவனுக்குத் தலை கால் தெரியாத புழுகம். ஆடு, கோழி வெட்டி உரிக்கிறதிலை இருந்து அவியல் கிவியல் எல்லாம் அவன்ரைபொறுப்புத்தான். உனக்கும் ஆளைத் தெரியும்தானே! முழுக் கிடாயை மூச்சுவிடாமல் திண்டு விடக்கூடியவன். சபையெல்லாம் நடத்தி முடிஞ்சு, நாங்களும் சாப்பிட்ட பிறகு வெத்திலைத் தட்டோடை வந்து குந்தினுன் கந்தையா. பிறகென்ன? சமா துவங்கி விட்டுது மற்றவையை சிரிக்க வைச்சு சந்தோஷப்படுத்திற அவன்ரை கதையின்ரை உரிசையிலை. ஆர் மயங்கிப் போகாயினம்.

கதையை இப்பிடித்தான் துவங்கினுன்–''கேட்டியோ நாகலிங்கம்!'' – என்ன இருந்தாலும் எங்கடை ஒல்சிலோன் அவனுக்குத் தகுந்த பட்டம்தான், இந்த ஊரிலை, றவுனிலை அவனுக்கு நிகர் அவனேதான்.

''அது சரி தான் கந்தையா. அதை இப்ப ஆர் இல்லையெண்டு சொன்னது! அவனை நாலூறு பார்க்காதை.'' எண்டான் நாகலிங்கம்.

''இல்லை நாகலிங்கம், ஒல்சிலோன் எல்லாத்தையும் சொல்லிச் சொல்லித்தான்ராப்பா செய்யிருன். பணக்காரன் ஆகிக் காட்டிரன் பார்' ஏதோ ஒரு கதையோடை. கதையாக பன்னிரண்டு வருஷத்துக்கு முந்தி ஒரு நாள் சொன்னுன். ஆகித்தான் விட்டான் ''உதை ஏன் நாய் தின்னுக்காசை. உது வரும் போகும். ஆயிரம் செல்வம் இருந்தாலும் ஒரு குழந்தைச் செல்வத்துக்கு ஈடாகுமா? ஏலுமெண்டால் பணம் தேடின கெதியிலை ஒரு குழந்தையைப் பெத்துப் போடுபாப்பம் எண்டு போன வரியம் இந்நாள் பகுதியிலை சும்மா ஒரு முசுப்பாத்தியிலை சொன்னனன்.''

''சரிபார்ப்பம்'' எண்டான்

'' இந்தா பாருங்கோவன் ஒருவரியத்திலை, இந்தா உள்ளே சத்தம் கேட்கிறது தானே குவாக்குவா சத்தம்''

''பின்னை என்னையும் உன்னையும் போலை வீட்டுக்குள்ளை கிடந்து வதவதெண்டு பெத்துத் தள்ளிப் போட்டு அவதிப்படச் சொல்லுறியோ அவனையும். ஊர்தேசம் அடிப்பட்ட மனிசன். அவன் எது எது எப்பெப்ப வேணுமெண்டு கை நாடிபிடிச்சு செய்யிருன் மனிசன்'' எண்டான் நாகலிங்கம்.

கேட்டியோ அல்லி, இந்த அறுவாங்கடை கதையைக் கேட்டதுகளுக்கு சிரிச்சுச் சிரிச்சு குடலறுந்து போச்சு, உள்ளையிருந்த அன்னப்பிள்ளையும் குலுங்கிக் குலுங்கி சிரிச்சாள் அதைக்

கேட்ட முத்தாச்சி அக்கா சொன்னு.

"அட நாகலிங்கம், எட கந்தையா உத்த நாத்தல் வாயாலே என்னெனன் கதை யெல்லாம் கதைக்கிறியள். அவள் பச்சைப் பிள்ளைத்தாச்சியுமல்லே குடல் குலுங்கக் குலுங்கச் சிரிக்கிருள். பச்சை புண்குடல் பேந்து அதிலேயிருந்து வேறை நோய்நொடி வந்திடப் போகுது" முத்தக்கா செல்லச் சினப்போடு கூறினுள்.

"என்ன முத்தக்கா உப்பிடிச் சொல்லிப் போட்டாய்! எத்தினை பேருக்கு பத்தியம் பரிகரிப் பெண்டு செய்து, பேந்தும் பிள்ளைப் பெறுகிறதுக்கு பெம்பிளை களா எழுப்பி விட்டனி. உன்ரை வென்னீர்க் குளிப்பைக் குளிச்சு நீ அரைச்சுத் திரட்டி குடுத்த காயக் கூட்டை மணக்க வெளியிலே இருக்கிற எங்களுக்கே சதுர அலுப்பும் தேகநோவும் மாறின மாதிரி இருக்கும். அப்பிடிப்பட்ட உன்ரை சரக்குத்தண்ணியை குடிச்சவள்களுக்கு பேந்தென்னண்டு வயிற்றுப் புண்ணும் புதறும் வருமே. பிள்ளைப் பெறுகிற நோவைவிட உன்ரை பத்தியக் கோதாரியாலே அவளுகள் இனிப் பிள்ளையும் வேண்டாம் பிரியனும் வேண்டாமெண்டு சொல்லுகிருளுகள். இதுக்கு இப்ப நீ என்ன சொல்லப் போருயெண்டு பார்ப்பம்" எண்டான் கந்தையா.

"எதுக்கு? உன்ரை நாத்தல் சவக்கதைகளுக்கோ. நாத்தலனுக்கு வாயிலே வந்ததெல்லாம் கதைதானே. ஏதாவது ஏட்டிக்குப் போட்டியாக சொல்லி ஆரையும் சிரிக்க வைக்கா விட்டால் அவனுக்குப் பொச்சம் அடங்காது. எங்கை முத்தையா உதாலே போறன் காணயில்லை?

"அவனே? அவன் சும்மா எழும்பிப் போயிருக்கமாட்டான். ஏதாவது வியாபார நிமித்தமான யோசனை வந்திருக்கும்" எண்டான் கந்தையா.

"கேட்டியோ அல்லி! கந்தையா பச்சை பச்சையா சொன்னபகிடிகளை கேட்டு அடக்கேலாமல் வந்த சிரிப்பை கோடிப்புறம் போய் நிண்டு சிரிக்சுப் போட்டு வந்தன்.

"எட கந்தையா உவன் முத்தையா ஏதாவது வியாபார யோசனையோடைதான் போயிருப்பான் எண்டியே! இப்பதான்ரா எனக்கும் ஒரு சங்கதி ஞாபகத்துக்கு வருகுது. சங்கதி என்னண்டால்?

போன வரியத்திலே இருந்துதானே இவன் முத்தையன் ஊரோடை வீட்டோடை நிக்கத் துவங்கினவன். இது கால வரை கோயிலைக் குளத்தை தேரைத் திருவிழாவை அறியாமலிருந்த அன்னப்பிள்ளையும் போன வரியம் தான் கோயிலுக்குப் போக

பெண்டிலும் புரியனுமாக புறப் பட்டினம் நானும் கொண்டோடி பின்னை கூடப்போனன். ''

'' உவனே? உவனுவது கோயில் கும்பிடுகிறதாவது. அவன் முருகனேடையும் வியாபார விஷயமாகத்தான் கதை குடுத்திருப்பான் '' முத்தக்காவின் கதை நடுவே குறுக்கிட்டான் கந்தையா. அவன் இப்பிடித்தான் ஆற்றை கதையையும் முழுசாகக் கேட்கமாட்டான். அதுக்குள்ளை தானும் பூந்து ஏதாவது சொல்லா விட்டால் பத்தியப் படாது. அந்த எரிச்சலுடன் முத்தக்கா சொன்னுள்.

'' டே கந்தையா நீ எப்பவும் இப்பிடித்தான்ரா. பீக்கு முந்தின குசுமாதிரி மூதேவி நான் சொன்னதுக்குப் பிறகு சொல்லு பின்னைக்கேள். ''

'' ஆ, சொல்லு முத்தக்கா, நான் எனிக் குறுக்கிடயில்லை இந்த குளறி கந்தையாவாலை சும்மா ஆரும் பேசுறதைக் கேட்டுக் கொண்டிருக் கேலாது, அது தான் ஆ, சொல்லு, சொல்லு.''

'' நல்லூர் பூங்காவனத்திலண்டு நானும் கொண்டோடி இதுகளோடை கோயிலுக்குப் போனன். அன்னப்பெட்டை அடியழிக்கிற விரதகாறி முத்தனையும் அங்கப்பிரதட்சினை செய்யச் சொல்லி எவ்வளவோ பாடுபட்ருப்பாள். அது சவம் மாட்டன் எண்டிட்டுது அவன் சொன்ன மாதிரி செய்திருந்தால் பிறந்தது ஒரு ஆண் குஞ்சாக வந்திருக்காதோ! சரி, சரி இப்பதான் என்ன குறைஞ்சு போச்சு. அன்னம் தன்ரை கட்சிக்கு ஆள்சேர்த்துப் போட்டாள். இனிப் பிறக்கிறதாவது அவன்ரை கட்சியாக இருக்கட்டன்.

பின்னையடா கந்தையா, என்னையும் அன்னத்தையும் கூட்டிக்கொண்டு போய் கோயில் முகப்பிலை விட்டிட்டு உதிலை ஒருக்காப் போவிட்டு வாறன். நீங்கள் உங்கடை கருமங்களைப் பார்த்திட்டு இதிலையே வந்து நில்லுங்கோ எண்டுவிட்டு போனன், நாங்கள் செய்யிற காரியமெல்லாம் அதுதான் அவள் அடியழிச்சு, அரிச்சனைசெய்து கொண்டு சுவாமிக்குச் செய்யிற காரியமெல்லாம் விக்கினமின்றிச் செய்து போட்டுவந்து நிக்கிறமே, இன்றேடின்று நிக்கிற மௌட இப்ப வருவான் பின்னை வருவான் எண்டால் எடச்சுக்கிமோனை ஆற்றைக்கைவாறது. நாங்களும் அங்காலை இஞ்சாலை திரும்பிப் பார்த்துப் பார்த்து கண்ணும் பூத்துப் போச்சு. அந்த எரிச்சலோடை அன்னத்துக்குச் சொன்னன். ''

'' அன்னம் உவன் எங்களை மறந்திட்டு வீட்டகீட்டை போவிட்டானே? ''

'' சே, அப்பிடி இருக்காது முத்தக்கா. எதுக்குமொருக்கா வா முத்தக்கா வீதியைச் சுத்தி

வந்து பாப்பம்,'' என்ருள் அன்னப்பிள்ளை

''பெண்ணுப் பிறந்தவளைக் கூட்டிவந்தமே எண்டில்லாமல் ஆரோடை போனுலும் போகட்டுமெண்டு விட்டெறிஞ்சு போட்டுப் போவிட்டானே! எனக்கு வந்த ஆத்திரத்திலை ஆளைக்கண்டால் நல்லா நாலு கிழிப்புக் கிழிச்சுப் போட்டுத்தான் விடுவன்'' எண்டு அன்னத்தின்ரை காதுபட பேசிக் கொண்டன்,

எங்களுக்கெதிரிலே பலூன் காரன் ஒருவனை சுற்றிநின்ற பெடிபெட்டையள் நடுவில் அவன்தான், முத்தையன் பலூன் வித்துக்கொண்டு நின்ருன். அன்னமும் கண்டுவிட்டாள். அவளுக்கு மூச்சும்பேச்சே வரவில்லை. என்ருலும் ஒண்டும் பேசாமல் நாவடைச்சுப் போச்சு. சரி உவன் வரட்டும் எண்டிட்டு ஒரு பக்கமாக ஒதுங்கி நிண்டம். பலூனும் வித்துமுடிய தம்பி பொண்டிலையும் என்னையும் தேடி நாலாவீதியும் ஒருக்காலோ இரண்டுதரமோ அலையிருரே அன்னத்துக்குச்சொல்லிப் போட்டன் கூப்பிடாதை உவன் எங்களை அலைச்சதுக்கு தக்கது உவனையும் அலைக்கழிக்க வேணுமெண்டு.'' கடைசியிலை ''என்னடா முத்தையா! பலூன் வித்துப் போட்டியா? உவ்வளவு காசாசையாடா உனக்கு. தேடித் திரட்டினது போதாதெண்டு கோயில் தினத்திலையுமா உந்த வேலை செய்ய வேணும்.

''இல்லை முத்தக்கா இஞ்சைபார் இந்த சின்ன வியாபாரத்தாலை இப்ப எவ்வளவு உழைச்சிருக்கிறனெண்டு நினைக்கிருய்? இந்தாசுளையாக பதினைந்து ரூபா. இதிலை என்ன வெக்கமெண்டு கேட்கிறன்?'' எண்டு சொல்லி காசை அன்னத்தின்ரை கையிலை குடுத்தான்.

எனக்கு அவனேடை பேசி வெல்ல முடியவில்லை. கண்டபடி பேசிப் போட்டன். முத்தக்கா சொன்னவைகளைக் கேட்ட குளறி கந்தையா பெரிதாக கெக்கட்டம் விட்டு சிரித்தான்.

கேட்டியோ அல்லி! முத்தக்கா அச்சொட்டா அந்தச் சங்கதியைநினைவிலை வைச்சு சொன்னதெல்லாம் உண்மைதான். முத்தக்கா சொன்னதுக்கு குளறி கந்தையா ஏதாவது சொல்லாமல் விடுவானே! அவனும் என்னைப் பற்றி தன்ரைப் பங்கைச் சொல்லத் துடங்கினன்.

''உவன் முத்தையா நிண்டடியுக்கை எத்தனை வியாபாரம் செய்வானெண்டுஎனக்கு தண்ணி பட்ட பாடம் உதுபறவாயில்லை முத்தக்கா. உதைவிடவும் உவன் மோசமான வியாபாரம் கூடச் செய்திருக்கிருன், அது என்னெனெண்டால்?

அதுகுமொரு வரிய நல்லூர் திருவிழாவுக்கைதான். இந்த வீடு கட்டுறதுக்காக மண்ணுக்குச்

சொல்லுறதுக்கு கிட்டங்கிக் கடற்கரைக்கு போன போது தான் அது நடந்தது, கடற் கரையிலே ஒரே சனக் கூட்டம். என்னெண்டு நாங்களும் போய் எட்டிப் பார்த்தம். பென்னும் பெரிய சுறு விலேயில் இழுபறிப் பாட்டில் கிடந்தது. முத்தையா விலேயைத் தீர்த்து வாங்கிப் போட்டான், நான் திடுக்கிட்டுப் போனன்போனகாரியத்தைவிட்டு கோயில் திருவிழாவும் அதுகுமாக இந்த அறுவான் ஏன் இப்பிடிச் செய்தான்'' எண்டு இவனைப் பார்த்து சினந்தன்.

''கொஞ்சம் பொறப்பா, மயிலிட்டிக்கு ஒருக்கால் போய் விட்டு வருவம் வா.'' என்றான் எனக்கு உண்மையாக ஒண்டுமே விளங்கவில்லே முத்தக்கா...... மயிலிட்டிக்குக் கொண்டு போன சுறு வாங்கின விலேயிலும் இரண்டு மடங்கு மேலாலே விலே போயிற்று எல்லாம் நினேக்க முழிக்கிறதுக் கிடையிலே நடத்தி முடிச்சிட்டான், எட்டுப் பவுண் லாபமெண்டான். நான் ஒண்டும் பேசவில்லே. போன தென்னத்துக்கோ மண்ணுக்குச் சொல்லப் போய் சுறுவை வாங்கி மயிலிட்டிக்குக் கொண்டு போய் பொன்னுக்கினன், நின்றடிக்குள் நினேக்க முழிக்க கண்கட்டி வித் தைக்காரனுக மாறி மண்ணேயும் பொன்னுக்கும் அவனுடைய சாமர்த்தியம் ஆருக்குவரும் முத்தக்கா.''

''பின்னே நீயும் இருக்கிறியே பிடிச்சு வைச்ச சாணகக் கும்பி பிள்ளேயார் மாதிரி. உனக்கு புத் தியிருந்தால் பிறந்த வீட்டுக்கை செத்திருக்கமாட்டியே!'' எண்டு முத்தக்கா சொன்னதைக் கேட்டு துடக்குக் கழிவுக்கு வத்திருந்தது களெல்லாம் விழுந்து விழுந்து சிரிச்சிதுகள்,

(தொடரும்)

கிறிஸ்து பிறந்தபோது இருந்த உலக மக்கள் தொகை 1700 ஆண்டுகள் கடந்த பின்னர்தான் இரண்டு மடங்காயிற்று. ஆனல், இன்றைய உலக மக்கள் தொகை 83 ஆண்டுகளில் இரட்டிப்பாகி உள்ளது. எவ்வளவு விரைவான வளர்ச்சி! மக்கள் தொகைக் கட்டுப்பாட்டிற்காக இன்றைய உலக நாடு கள் எடுத்து வரும் முயற்சிகள் அனேத்தும் தொடர்ந்தாலும் கூட இன்றைக்கு 503 கோடியாக உள்ள உலக மக்கள்தொகை கி. பி. 2000 இல் 800 கோடியாக உயரும்.

வைத்திய ஆலோசனை

# இரத்தக் கொதிப்பும் தேனீரும்

**நாம் பருகும் பானங்களாலும் சில பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன**

தேனீர் அதிகம் அருந்துவதால் இரத்தக் கொதிப்பு ஏற்படலாம். தேனீரானது பித்தத்தின் தன்மைகளை அதிகரிக்கச் செய்கிறது. பித்தம் இரத்தத்தில் அதிகமாகக் கலப்பதால் இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது. இதையே ஆயுர்வேதத்தில் பித்தத்தின் பிரகோபத்தால் (B P.) இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது என்பர். தேனீரால் மலபந்தம், சலரோகம் போன்ற வியாதிகளும் ஏற்படுகிறது. மலம் பந்திப்பதால் வாதரோகத்தின் தன்மையும் அதிகரிக்கிறது.

இதே வழியில் கோப்பி, கொக்கோ, போன்ற சாதாரண போதை வஸ்துக்களும் மனித உடலில் பலவிதமான வியாதிகளைத் தோற்றுவிக்கின்றன. விசேசமாக நரம்புத் தளர்ச்சியை உண்டுபண்ணுகின்றன. பொதுவாகக் காலையில் நீர் அருந்துவது விசேசமானது. இல்லையேல் பழம் சோற்றுத்தண்ணீர் அருந்தலாம். பின்னரே சாதாரண உணவை உண்ணவேண்டும். இரசாயனம் கலந்த உணவுகளையும் காலை வேளையில் உண்பதை தவிர்த்துக் கொண்டால் நல்லது.

நாம் சாதாரணமாக காலை, மாலை, மதிய உணவுகளை உட்கொள்ளுகிறோம். சாம உணவு என்று ஏன் ஒரு உணவை உட்கொள்ளுவதில்லை? இதனால் இரைப்பை சற்று ஒய்வெடுத்துக் கொள்கிறது. அது காலையில் மீண்டும் வேலை செய்வதற்கு சுடுநீரோ, தேனீரோ வழங்கக் கூடாது. குளிர் நீரோ, பழச்சாறோ, பழம் சோற்றுநீரோ வழங்குவதுதான் சிறந்தது. இதனால் உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகின்றது. நாளாவட்டத்தில் அருந்தும் தேனீரானது கிரோயின் போன்ற போதை வஸ்துகள் உண்டாக்கும் தீமையை ஒத்த தீமைகளையே தருகிறது.

**டாக்டர் எஸ். சுபாஸ்கரன்**

சிறுகதை

# நிறைவேறாத காதல்

சி. ஸ்ரீதரன்

நடு நிசி ஆகியும் நித்திரா தேவியின் அரவணைப்பின்றி ரஞ்சித் அவதிப்பட்டான், மன அமைதியுடன் நிம்மதியாக அவன் நித்திரை கொண்டு எவ்வளவு நாளாயிற்றுது. இளம் பருவத்து இனிய நினைவுகளில் அவன் எப்போதுமே மிதந்ததில்லை. வறுமைக் கோட்டின் கடைசிப் படியில் கிடக்கும் குடும்பம். அதன் பாரிய பொறுப்பும் பாறாங்கல்லுச் சுமையாக தலையை நசிக்கும் போது நிம்மதியான நித்திரை எங்கே வரும் பாதியிலேயே பாடசாலை வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது, பொறுப்பில்லாத தந்தைக்கு மூத்த மகனாக பிறந்ததால் தன்னுடைய சகோதர சகோதரிகளுக்குசீதனம் தேடுவதும் அவர்களை நல்ல படியாக வாழ வைப்பதும் அவனுடைய கடமையாய் இருந்தது.

மாடாய் உழைத்தான். ஓடாய்த் தேய்ந்தான். பல கஷ்டங்களுக்கு மத்தியில் அவனது திட்டங்கள் ஒருவாறு நிறைவேறியது. ரஞ்சித்திற்கு 25 வயதாகிவிட்டது.அவனுக்குஒருகுடும்பவாழ்க்கையை அமைக்க தாய் தகப்பன் நல்ல சீதனம் வாங்கிச் செய்ய எண்ணினர். ஆனால் ரஞ்சித் காதலித்து கல்யாணம் செய்யவேண்டும். வரதட்சனையை அடியோடு விரட்டி சமுதாயத்தில் இளைஞர் யுவதிகளுக்கு ஓர் எடுத்துக் காட்டாக கஷ்டப்பட்டாலும் ஏழையாக வாழ்ந்து காட்ட விரும்பினான். ரஞ்சித்திற்கும் ஆசாபாசம் இருக்கத்தானே செய்யும். அவனும் ஒருத்தியை நேசித்தான். உயிருக்குயிராக பூஜித்தான். அவளை எப்படியும் அடைந்து விடவேண்டு மென்பது தான் அவனுடையஒரேபோராட்டம், அதற்கு முட்டுக்கட்டையாக தொழில் பணம் அந்தஸ்து தலை நிமிர்ந்து நின்றது. எப்படி அந்த அழகு ராணியை சம்மதம் கேட்பது. அம்மா அப்பாவிடம் தனது முடிவை கூற அவனது இதயம் துடியாய்த் துடித்தது. எத்தனை நாட்களுக்குத்தான்லதாவிற்கு சாக்குப் போக்கு செல்லிச் சமாளிப்பது, ரஞ்சித் மனதை திடப்படுத்தினான். இன்று எப்படியும் தனது தாய் தகப்பனிடம் தயக்கத்துடன் தலையை குனிந்த வண்ணம் விருப்பத்தை சொன்னான்.

''ரஞ்சித் அது அவ்வளவு வசதியான இடம் அல்ல. இன்னும் எவ்வளவோ நல்ல இடம் வரும். பார்த்து நல்ல சீதனம் வாங்கி ராஜா போல கஷ்டம் இல்லாமல் வாழ வைக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.'' என்று ஏதேதோ எல்லாம் பிரசங்கம் செய்தனர். லதாவோடு அவன் பேசியது, ரி, வி, பார்த்தது, கதைப்புத்தகங்கள் கொடுத்தது, வீச்சிற்கு போனது, கொஞ்சி கும்மாளம் அடித்தது, எல்லாம் அவன் நெஞ்சத்தில் திரைப்படமாய் காட்சியளித்தது லதாவை என்னால் பிரிந்து மறந்து வாழ முடியாது. நான் இறந்தாலும் வாழ்ந்தாலும் அவள் மடியில் தான், என் எதிர்கால மனைவியும் அவளேதான், என்று உறுதி பூண்டான். அவன் ஊணுறக்கமின்றி வாடிப்போய் இருந்தான். யோசித்து யோசித்து மெலிந்து போய்விட்டான். ரஞ்சித்திற்கு எந்த சமாதானமும் அமைதியை தருவதாகத் தெரியவில்லை. நாளைக்கு லதாவிடம் என்ன சொல்வது? எப்படிப் பேசுவது? விபரம் கூறினால் அந்தச் சின்ன உள்ளம் தாங்குமா?

ஒரு நாள் மாலை ரஞ்சித் வழமையாக லதாவைச் சந்திக்கும் இடத்திற்கு வந்தான். லதா கன்னத்தில் கையை வைத்தவாறு அந்தப் பூ மரத்தடியில் சிந்தித்தவாறு சோகமயமாக அமர்ந்திருந்தாள், '' லதா.,,லதா,,என ரஞ்சித் வாஞ்சையாக அழைத்தான். அவள் பதில் சொல்லாமலே தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள், '' லதா! என்னை மன்னித்திடு. சில தவிர்க்கமுடியாத காரணத்தால் உன்னைச் சந்திக்க முடியாமல் போய்விட்டது, அதற்காக லதாபிளீஸ் நீ என்ன தண்டனை கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறேன். லதாக்குட்டி அச்சாப்பிள்ளை முன்புமாதிரி அன்பாக என்னை ரஞ்சித் அத்தான், என்று ஒரு முறை சொல் லதா என்று மன்றாடினான். வஞ்சகம் இல்லாத ரஞ்சித்தின் அன்பு வார்த்தைகளைக் கேட்டதும் லதா அன்பு மழையாய் பொழிந்தாள். உடல் பூரிப்பால் அப்படியே ரஞ்சித்அத்தான் என்று அழைத்தபடியே இறுகக்கட்டி அணைத்துக் கொண்டு மேலும் தேம்பினாள் இருவரும் முத்த மழையாய் பொழிந்து கொண்டார்கள்.

லதாவின் பெற்றோரின் சம்மதம் கேட்க ரஞ்சித்தின் அப்பா அம்மா இன்னும் இரண்டே நாட்களில் வரவிருப்பதான செய்தியே அது. சம்பிரதாய முறைப்படி ரஞ்சித்தின் வீட்டார்கள் சம்மதம் கேட்கப் போனார்கள். இரு பக்கமும் கலந்து பேசினார்கள். லதாவின் மூத்த சகோதரியை மணந்து கொண்ட மருமகனே முதலில் கதையைத் தொடக்கினார் '' அது சரி சம்மதம் எல்லாம் பெரிதாக பேசிவிட்டீர்களே மாப்பிள்ளை என்ன தொழில் செய்கிறார்? மாத வருமானம் என்ன? என்ன படித்திருக்கிறார்? சொந்த வீடு வாசல் தோட்டம் துரவு இருக்கின்றதா? இதையெல்லாம்

யாரும் கேட்கவில்லையே'' என்று கேள்வி மேல்கேள்வி எழுப்பினர். நீங்க கேளுங்க மாப்பிள்ளை என மருமகனை சாடை காட்டி விட்டு மாமனர் ஒதுங்கிக் கொண்டார்

வீடு வாசல் பட்டம் பதவி நிரந்தரத் தொழில் என்று சொல்லிக் கொள்ள எங்க பிள்ளைக்கு எதுவும் இல்லை, ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிருர். சாதாரணமாகப் படித்துள்ளார். அவ்வளவு தான். பெரிதாக ஒன்றும் சொல்லிக்கொள்ள இல்லை. என ரஞ்சித்தின் அப்பா கூறினர். நாங்க கேட்க வேண்டிய கேள்வியை நீங்கள் முதலில் கேட்கிறீர்கள். அதற்கு காரணம் எங்களுடைய ஏழ்மைத் தன்மை தான்.

அதற்கு லதாவின் அக்கா மாப்பிள்ளை :'இந்தா பாருங்க எங்க பிள்ளையை நாங்கள் கஷ்டப்பட விடமாட்டோம். நிறைப வசதி இருக்கு, அது போய் சந்தோஷமாக வாழ்வதற்கு ஒரு வசதியான இடத்தில் கல்யாணம் செய்து வைப்போம். வசதியோடு செல்லமாக வளர்ந்த பிள்ளை, உங்களுக்கு அப்படியானவசதி இல்லை. நீங்க வேறு இடம் பாருங்கள்,'' என்று சொல்லி விட்டு சபையை விட்டு எழும்பி போய்விட்டார்.

ஏமாற்றமும், வெட்கமும் பிடுங்கித் தின்னமனச்சோர்வுடன் ரஞ்சித்தின் அம்மா அப்பா ஏனையோர் வீடு திரும்பினர்கள்' ''ரஞ்சித் என்ன சொன்னர்கள்?, மருமகளை பிடித்திருக்கிறதா?' என்று ஆனந்தத்துடன் அம்மாவிடம் கேட்டான்,

''நீ எனக்கு ஒரே ஆண் மகன் உன் சகோதரிகளின் நலனுக்காக இதுவரை உன் வாழ் நாளையே தியாகம் செய்தாய். ரஞ்சித் எனக்கும் உன் அப்பாவிற்கும் சோறு போட்டாய், உன் ஆசையை எங்களால் நிறைவேற்ற முடியாமல் போய் விட்டதென'' விம்மி அழுதாள். அம்மாவே தொடர்ந்தாள் ''அது தானே முதலிலேயே சொன்னேன் நீ கேட்டாயா? கடைசியில் எங்கள் முகத்தில் கரி பூசி அனுப்பி விட்டார்கள்.''

என்னம்மா சொல்லுகிறீர்கள்? சொல்வதை கொஞ்சம் விளங்க கூறுங்கள்," என்ருன் ரஞ்சித். அங்கு நடந்த எல்லா விடயங்களையும் ஒன்றும் விடாமல் அம்மா ரஞ்சித்திடம் சொன்னுள். ரஞ்சித் எரிமலையாய்வெடித்தான். ஆவேசம் கொண்டான். லதா பிரிவதை விட அம்மாவை மனம் நோக வைத்ததை அவனல் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

லதாவை சந்திக்கு இழுத்து நாலு பேர் அறிய வஞ்சம் தீர்க்க வேண்டுமென்ற ஆத்திரத்துடன் அவள் வீட்டு வாசலில் நின்று கத்தினன். லதா வீட்டு வாசற் படியில் வந்து நின்ருள். ''லதா உன் அத்தான் சொன்னது பெரிதாக இருந்தால் இங்கே இருந்து கொள் பணம், காசு, பட்டம், பதவி, சொத்து, சுகம்,

இதையா நீ காதலித்தாய்; நம்ம இரண்டு பேரின் அன்பு இதற்கா அடிமை. அப்படி இல்லை என்றால் இப்பொழுதே புறப்பட்டு என்னோடு வா.

''அம்மா! கொஞ்சம் பிச்சை போடுங்க சாப்பிட்டு மூன்று வேளையாச்சு ' என்ற குரல்கேட்டு ஜன்னல் வழியாக லதா பார்த்தாள்! அவளுக்கு ஆச்சரியமாய் போய் விட்டது. தன்னைப் போல ஒரு அழகிய இளம் பெண் கையில் குழந்தையுடன் பிச்சைக்காரியாக நின்றாள்.

அம்மா பசிக்குது ஏதாவது கொஞ்சம் தாங்க என்று கெஞ்சி நின்றாள். லதா, ரஞ்சித்தை மறந்தவளாக அந்தப் பிஞ்சைக்காரியுடன் கதை கொடுத்தாள் '' உங்களைப் போல நானும் ஒருகாலத்தில் இருந்தவள் தான் அழகாக இருக்கிறேன் என்றுஅன்பேஆருயிரேகண்ணே, மணியே என்று காதலித்தான். நானும் காதல் பெரிது என்று அம்மா அப்பாவை மறந்து உதாசீனப் படுத்தி விட்டு அவனையே கட்டிக் கொண்டேன், சந்தோஷம்அனுபவித்து என்இளமை போச்சு. கையில் குழந்தையுடன் அவர் என்னை தவிக்க விட்டு விட்டு கானல் நீராய் மாறி விட்டார்.'' என விக்கி விக்கி அழுதாள்,

''இந்த சனியன் இந்த நேரத்திலா லதாவிடம் வந்து இதைக் கூறுவது என்று'' ரஞ்சித்தின் உள்ளம் குமைந்தது


MILKWHITE

உள்ளூர் உற்பத்தியைப் பாவிப்போம்.

உள்ளூர் பொருளாதாரத்தை பேணுவோம்.

பனை வெல்லம் பாவித்து, நல்வாழ்வு, வாழ்வோம்.

இயற்கையோடு இயைந்த வாழ்வு
எமக்கெல்லாம் இசைந்த வாழ்வு

மில்க்வைற் மேலுறையில் இருந்து 25 திருக்குறள் அனுப்பி ''படிப்பினை'' நூலையும், அண்ணல் காந்தி ஸ்ரிக்கரையும் பெற்றுப் பயன் பெறுங்கள்.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.

ஆவேசத்துடன் வெளியே வந்த லதா "பிளீஸ் ரஞ்சித் என்னை மன்னிக்க வேண்டும். நம் வாழ்கையில் நடந்ததை ஒரு கனவாக எண்ணிக்கொள்ளுங்கள். என்னை பெற்று வளர்த்த அன்புத் தெய்வங்களின்வார்த்தைகளை மீறி என்னால் உங்களோடு வந்து வாழ முடியாது, இனி மேல் என் வாழ்கையில் குறுக்கிடாதீர்கள்" என்று கூறி உள்ளே சென்று கதவை தாளிட்டுக் கொண்டாள். முற்றத்தில் நின்ற ரஞ்சித்திற்கு உலகமே இருண்டது "லதா" என்று கத்தியவாறு கதவை இடித்தான்.

லதாவின் அக்கா புருஷன் "வெளியேபோடா, இங்கே என்ன கலாட்டா பண்ணுறாய்?" என்று ஏசியவாறு ரஞ்சித்தை அடித்து ரோட்டில் தள்ளி விழுத்தினான். ரோட்டில் ஓடி வந்த லொறியில் எதிர்பாராத விதமாக சிக்குண்ட ரஞ்சித் கோர விபத்திற்குள்ளாகி அங்கங்கள் நசுக்குண்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்து துடித்தான். அந்தப் பிச்சைக்காரி அங்கு நின்று பெரிதாக பிலாக்கணம் வைத்தாள். லதா அங்கு ஓடிவந்து சேர்ந்தாள் "ஐயோ அம்மா என் பேச்சை நம்பியா நீங்க அவருக்கு அப்படி சொன்னீர்கள். அம்மா நானாக அப்படி சொல்லவில்லை? உங்கள் அக்கா மாப்பிள்ளை காசு கொடுத்து அப்படி நடிக்கச் சொன்னார். நான் காசுக்கு ஆசைப்பட்டதனால் அநியாயமாய் ஒரு உயிருக்கு ஆபத்தாச்சே" என,.....லதா கதறி அழுதாள் இரத்தக் கடலில்உறைந்துகிடந்த ரஞ்சித்தின் உடலை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தாள். கண்களில் நீர் ஆறாய் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. அவள் ஏன் அழுகிறாள், எதற்காக அழ வேண்டும்? சின்னப்புத்தி கொண்ட அந்தப் பெண் தன் குடும்ப கௌரவம் கோட்டைப் போகின்றதே என்பதற்காக அழுகின்றாள் போலும்.

---

## கௌரவம்

உள்ளதை உள்ளபடி காட்டுவதே உண்மையான கௌரவம். வறட்டுக் கௌரவம் என்பது போலி வேசமாகும். குறைகளை மறைப்பது. குறையில்லாதவன் போல் நடிப்பது, கல்விமான். புத்திமான், கொடையாளி போல் காட்டிக்கொள்வது போன்றவை யாவும் வறட்டுக் கௌரவத்தின் வெளிப்பாடாகும்.

விட்டுக் கொடுத்தல் அகௌரவம் என நினைத்துத் தானும் அழிந்து மற்றவரையும் அழிப்பது இந்த வறட்டுக் கௌரவமே.

---

# கொடும்பாவி

பாவிகள் இருப்பதனுலேயே மழை பெய்யாது விடுகின்றது என்பது தமிழ் மக்களின் நம்பிக்கை. மழையில்லாமல் கிராமங்கள் வாடும் காலத்திலே, ஊர் மக்கள் வைக்கோலாற் செய்த மனித உருவமொன்றினை ஊரைச் சுற்றி இழுத்துவந்து பாவிகள் செய்த கொடுமைகளையும், அந்தப் பாவிகளையும் கற்பனை செய்து அந்த வைக்கோல் உருவத்தின் மேல் ஏற்றி ஒரு பொது இடத்தில் வைத்துக் கொழுத்திச் சுட்டு சாம்பலாக்குவார்கள். இதனுல் பாவம் நீங்கி மழை பெய்யும் என்று நம்புகிருர்கள். இதனையே கொடும்பாவி இழுத்தல் என்றும் கூறி வருகிருர்கள்.

தோழியரிடையே பேச்சாகத் தொடங்கிப் பின் பாட்டாகி கொடும் பாவியை விளித்துக் கூறுவதாக முடியும். ஒவ்வோர் அடியையும் ஒவ்வொரு பெண் பாடுவாள்.

**அந்தப் பாட்டு:**

கொடும்பாவி சாகாளோ — எடியொரு
கோடி மழை பெய்யாதோ?
மாபாவி சாகாளோ — எடியொரு
மாரி மழை பெய்யாதோ?
நல்ல மழை பெய்யவில்லை — எடி
நாட்டோ செழிக்க வில்லை!
சீமானின் வாசலிலே — எடியொரு
செழித்த மழை பெய்யவிடு!
மேகத்து ராசாவே, வானத்து மந்திரியே
மழையை வரக் காட்டாயோ!

# தலைமைத்துவம்

தலைமைத்துவம் என்பது ஒரு மனித இயல்பூக்கமாகும். ஒரு குழுவில் அல்லது கூட்டத்தில் அல்லது கிராமத்தில் ஒருவர் தன்னுடைய திறமையால் அல்லது பலத்தால் ஏனையவர்களுக்கு தலைமைதாங்க முற்படுவர். மனிதன் குடும்பங்களாக இணைந்து வாழத் தொடங்கிய வரலாற்றுத் தொன்மையான காலமிருந்து இத்தலைமைத்துவம் வளர்ந்து வருகின்றது, ஒரு குடும்பத்துக்கு ஒருவன் தலைமை தாங்குகின்றான். அவ்வாறே பல குடும்பங்களுக்கு ஒரு தலைவன் தோன்றுகின்றான், தலைமை தாங்குவதற்கு பல இயல்புகள் அவசியமாகின்றது. தேக பலம், மனோபலம், தீர்மானங்கள் விரைவில் எடுக்கும் திறமை, போன்ற இயல்புகள் இருப்பவன் தான் ஒரு தலைவனாகின்றான்.

மனோதத்துவத்தின்படி ஒருவர் தன்னை முன்வைத்தால் அல்லது தன் சிறப்பை வலியுறுத்தல் என்பது ஒருவருடைய இயல்பூக்கமாகும். சமூகத்தில் ஒரு சிலரே இந்தக் குணமுடையவர்களாகப் பிறக்கின்றார்கள். இவர்கள் தங்களை பலருள் ஒருவராக வைத்திருப்பதில் திருப்தி அடைவதில்லை மற்றவர்களுக்கு முன்னோடிகளாக இருக்க விரும்புவர். இந்தக் குணம் இறுமாப்பு, கர்வம் என்ற குணத்தால் உந்தப்படுகின்றது. இந்தக் கர்வம் என்ற குணம் எம்முள்ளிருந்து எம்மை ஊக்குவிக்கும் போது நாம் முன்னேற வேண்டும், எமது பெயரை நிலை நாட்டவேண்டும், உலகத்தில் பெயரும் புகழும் பெறவேண்டும் என்று செயலாற்றுவோம்,

சி. எஸ். சுப்பிரமணியம்
கல்வி அதிகாரி — வளர்ந்தோர் கல்வி அதிகாரி.

சிறு குழந்தையிலிருந்தே இத்தலைமைத்துவம் வகிக்க விரும்பும் குணம் வெளிப்படையாகத் தெரியும். குழந்தை தனது அழுகையால் தான் விரும்பும் விடயங்களைப் பெறுவது இந்தக் குணத்தின் பிரதிபலிப்பாகின்றது, அடுத்த பருவத்தில் குழந்தை எல்லோருடைய கவனத்தையும் ஈர்ப்பதற்காகவும் தான் மிகவும் முக்கியமானவர் என்பதைக் காட்டவும் பலவித குறும்புகளையே தீரச் செயல்களையே செய்கின்றன. ஆசிரியர்கள், பெற்றோர், பிள்ளைகளின் இந்த தற்பெருமை அல்

லது கர்வத்தை நல்ல முறையில் பயன்படுத்தி தலைமைத்துவ இயல்புகளை வளரச் செய்யலாம்.

சில பிள்ளைகள் தங்களுடைய உடல் பலத்தை உபயோகித்து விளையாட்டுத்துறையில் வீரச் செயல்கள் புரிந்து மற்றப் பிள்ளைகளுள் தாம் சிறந்தவர்கள் என்பதை நிலை நாட்டுவார்கள். வேறு சிலர் தங்களது புத்திக் கூர்மையால் தலைமைத்துவம் தாங்க முற்படுபவர்கள். இவர்கள் கணித அல்லது விஞ்ஞான அல்லது கலையியல் துறையில் மேதைகளாக விளங்கி சமூகத்தில் தமக்கென்று ஒரு தலைமையிடத்தை தேடிக் கொள்வார்கள். சில பிள்ளைகள் ஏனைய கருமங்களில் மட்டமாகவோ சாதாரணமாகவோ இருந்தபோதிலும் தமது மாணவருள் தலைமைதாங்க விரும்பி முன்வருவார்கள். இதுவும் ஒரு இயல்பூக்கமாகும்.

பொதுவாக எல்லா மனிதர்களுக்கும் தங்களது இளம்பராயத்தில் இயல்பாகவே முன்நிற்க வேண்டும் தலைமை தாங்க வேண்டும் என்ற மனோநிலை உள்ளது. இந்த விருப்பத்தை பல நல்ல அல்லது தீய வழிகளில் செயல் மூலம் பிரதிபலிப்பார்கள், சமூகத்திலுள்ள ஆசிரியர், பெற்றோர், ஏனையோர் இவர்களினது செயல்களை நல்வழிப்படுத்தி ஊக்கமளிக்கும் விதத்தில் தலைமைத்துவம் என்ற குணம் வளரும்.

ஆன்மீக ரீதியான தலைமைத்துவம் என்னும் ஒருவித தலைமைத்துவம் உண்டு, உயர்ந்த மனப்பாங்குடன்பக்திநிலையில் ஏனையமக்களை விட உயர்ந்த மனிதர்கள் உலகத்தில் தோன்றுகின்றார்கள், இவர்களுடைய மனத்தூய்மை உயர் இலட்சியம் பக்திநெறி, ஆகியவற்றால் சமுதாய மக்கள் கவரப்படுகின்றார்கள். மக்களை நல்ல வழிப்படுத்தவும், ஒழுக்கத்தில் சிறக்கவும் இம்மையிலும் மறுமையிலும் நிம்மதி அடையக் கூடிய தூய வழிகளை இவர்கள் மக்களுக்குகாட்டுவதினால் தலைவர்களாகிறார்கள் வரலாற்றில் பல மதங்களிலும் இவ்வாறு தலைமைத்துவம் அடைந்தவர்களை காணலாம். இராமகிருஷ்ண பரமகம்சர், சுவாமி விவேகானந்தர், புத்தர் பெருமான், யேசுநாதர், தீர்க்கதரிசி நபிநாயகம், போன்றவர்கள் இந்த வகையைச் சார்ந்தவர்கள்.

மக்களுக்குச் சேவையாற்றி அவர்களுடைய இன்னல்களைப் போக்கி உலகத்தில் பலர் தலைவர்களாகியுள்ளார்கள். புளொறென்ஸ் நைட்டிங்கேல் போன்ற பெண்கள் போர்க்களத்தில்சேவை மூலம் தலைமைத்துவம் அடைந்தவர்கள். இன்று உலகம் புகழ் செஞ்சிலுவைச்சங்கம் இவர்களுடைய சேவையின் சின்னமாக விளங்குகிறது.

அரசியல் தலைவர்கள் விடுதலை வீரர்களும் தலைமைத்துவம் வாய்ந்

தவர்கள். அகிம்சை மூலம் ஒரு செய்வீரனுகத் திகழ்ந்து உலகத்துக்கே அகிம்சை மூலம் தூய்மையான இலட்சியங்களை சாதிக்கலாம் என்று மகாத்மாகாந்தி அடிகள் எடுத்துக்காட்டினுர்.

சமூகவிரோதமான தலைமைத்துவம் வளர்வதற்கும் இடமுண்டு. அமெரிக்காவில், ஐரோப்பாவில் பெரும் கள்ளக் கூட்டத்தலைவர்கள் பலர் நாசவேலைகள் செய்து பணம் திரட்டுவதோடு பிரசித்தம் பெற்று விடுகின்ருர்கள் இவ்விதம் இரண்டாம் உலகமகாயுத்த காலத்தில் ஹிட்லர், முசோலினியும் ஏகாதிபத்திய தலைவர்களாக விளங்கினுர்கள்.

உளவியல் ரீதியாக நோக்கும்போது தலைமைத்துவம் என்பது ஒரு மனித இயல்பு. இது எல்லா மனிதர்களிலும் ஏதோ ஒரு அளவில் இருக்கும். அவர்களுடைய வளர்ப்பு முறை சுற்ருடல், நண்பர்கள், மனத்தாக்கங்கள், எல்லாம் ஒன்று சேர்ந்து நல்ல வழியிலோ அல்லது தீய வழியிலோ தலைமைத்துவத்தை வளரச் செய்கின்றது. நெப்போலியன் பிரான்ஸ் தேசத்து ஒரு பிரசித்தி பெற்ற தலைவர் ஆவார். அவர் உயரத்தால் குள்ளமானவர். சிறு பிள்ளையாக இருந்த காலத்தில் அவரை எல்லோரும் குள்ளன் என்று பரிகாசம் செய்தார்கள். இந்த அவதூற்றையும் இப்பரிகாசத்தால் ஏற்பட்ட மனத் தாக்கல் காரணமாக தான் உலகத்தை ஆட்டி வைப்பேன் என்ற தீர்மானத்தை எடுத்து 1789 தொடக்கம் 1815 வரை ஐரோப்பிய மக்களை நடுங்கச் செய்தான். ருஷ்யா மீது கூட படை எடுத்தான். இதிலிருந்து தலைமைத்துவ வளர்ச்சிக்கு மனத்தாக்கங்களும் காரணமாகின்றன.

நவீன உலகில் தலைமைத்துவம் என்பது மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. மக்கள் சமுதாயத்தை இணைத்து முன்னேற்றுவதற்கு தலைமைத்துவம் இன்றியமையாதது. பன்பாட்டு வளர்ச்சியாலும், உலகத்தில் செல்வ வளர்ச்சியாலும் மக்கள் இணைந்து வாழுதலை விடுத்து தனித்துவம் பெற்று முன்பு கூட்டுச் சமுதாயமாக இருந்த மக்கள் தற்போது தனி மனிதர்களாக பிரிந்து செல்கிருர்கள். இதனுல் போட்டியும் பிரச்சினைகளும் எழுகின்றன. மனிதன் ஒவ்வொருவனும் தான் செல்வத்தைப் பெருக்கவும் சுயநலமாக தன் சௌகரியங்களை கவனிப்பதில் மட்டும் ஈடுபடுகின்ருன். இவ்வாருன மக்களை ஒருங்கசேர்த்து வழி நடத்த தலைமைத்துவம் முக்கியமாகின்றது.

ஒரு நல்ல தலைவர் ஒவ்வொரு துறையிலும் இருந்தால் நாட்டுக்கு மிகவும் சிறப்பாகும். அரசியல், சமூக, ஆத்மீக, பொருளாதாரத்துறைகளில் தனித் தலைவர்கள் தோன்றி சமுகபலத்தைஇணைப்பது மிக அவசியமாகின்றது. நவீன காலத்தில் தலை

மைத்துவம் புதுக்கருத்தாகசெயல் படுகின்றது. ஒருதலைவன்'சமமான வருள்முதல்வராக திகழுகின்றான் தலைவனுடையகடமை இணைத்தல் திட்டமிடல், ஊக்கமளித்தல், முன்னேற்றல், மதிப்பிடல், போன் றவை, இவைகளை முன்போல் சர்வாகார முறைப்படி ஒருவர் தானாக'செயலாற்றாமல் சனநாயக முறைப்படி எல்லோரும் நானும் ஒருவராக இருந்து கருமமாற்ற வேண்டும்.

ஆபிரிக்காக் கண்டத்திலும் வேறு சில ஆசிய நாடுகளிலும் சமீப காலத்தில் பல குழப்பங் கள் தலைமைப் பிரச்சினையால் எழுந்திருப்பதைக் காணலாம். தொழிலாளர்களைத் தலைவர்கள் பிழையான முறையில்வழிநடத்து வதால் குழப்பங்கள் ஏற்படுகின் றன. நல்ல முறையில் தலைமைத் துவத்தை வளர்ப்பதற்கு சிறு பிள்ளைக்காலம் தொட்டே பெரி யவர்கள் விடாமுயற்சி எடுக்க வேண்டும். பிள்ளைகளுடைய தலை மைத்துவ இயல்பூக்களை நல்ல வழிப்படுத்தி நல்ல முறையில் அவர்களை வளர்த்தல் அவசிய மாகின்றது.

சர்வாதிகாரத் தலைவர்;-

தான் கூறுவது சரி என்றும் தான் இட்ட கட்டளையை மற் றையோர் நிறைவேற்ற வேண் டும் அதற்கு ஆட்சேபனை தெரி விக்கக்கூடாது. தான் கூறுவது செய்வது, சரி என எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஓர் தலைவர் நினைப்பாராகில் அவர் ஓர் சர்வாதிகார தலைவர் எனப்படுவர். சர்வாதிகாரி அதி காரம் பெறுவதற்கு பலாத்கா ரத்தை உபயோகித்து ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிக்கொள் வார். பின்புதன்வலுவைப் பயன் படுத்தி மக்களை அடக்கி ஆழ் வர்ன். இதனால் மக்கள் அச்சத் துடன் செயற்படுவதால் சர்வா திகார ஆட்சியில் மிகத்துரித மான முன்னேற்றம் ஏற்படுதல் உண்மை. ஆனால் வரலாற்று ரீதி யில் அவதானித்தால் எந்த ஓர் சர்வாதிகாரமும் நீடித்து நிலை க்கவில்லை. சர்வாதிகாரியின் சாத னைகள் அவர் பதவி இழந்தவுடன் வெறுப்பும் அதிகாரத்திற்குள் ஒதுங்கியிருந்த மக்களால் ஒழித்து எறியப்படும். இவ்வாறான தான் தோன்றித் தலைவர்கள் நாட்டில் இருக்கும் சமுதாயத்திலுள்ள சீர் கேடான நிலையை பயன் படுத்தி பலாத்காரத்தை உபயோகித்து பதவியைப் பெற்றுக்கொள்வர். ''வாள் எடுத்தவன் வாளாலே மடிவான்'' என்ற கூற்றிற்கமைய இவர்களின் அதிகாரமூலம் குறு கிய காலம்தான் நிலைக்கும். அத் துடன் இவர்களின் சாதனைகளும் அழிக்கப்பட்டுவிடும்.

ஜனநாயகத் தலைவர் :-

மக்களால் தெரிவு செய்யப் படுபவர் பெரும்பாலும் சமுதா யத்தில் மிகவும் விருப்பப்படும் ஒருவர் தெரிவு செய்யப்படுவர். ஆனால் சமுதாயத்தில் மிகத் திற மையானவர். அல்லது நிபுணர்

தெரிவு செய்யப்படுவார் என்பது உத்தரவாதமில்லை. இவ்வாறு தெரிவு செய்யப்படும் ஓர் தலைவருக்கு எல்லோரும் கீழ்ப்படிவார்கள், ஒத்துழைப்பார்கள். அவருடன் கலந்தாலோசிப்பார்கள். உறவுகள் சுமுகமாக இருக்கும். இணைந்து கருமமாற்றுதலும் கூட்டுறவு மனப்பான்மையும் சிநேகித மனப்பான்மையும் சிநேகித உறவுகளும் நம்பிக்கையும் நிலவும். இப்படியான குழுவினால் ஏற்படும் சாதனைகள் சிருஷ்டிகள், அன்பும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வரும். ஜனநாயக முறையான தலைமையே உலக மக்கள் எத்துறையிலும் விரும்புகிறார்கள்.

இதிலொரு குறைபாடும் உண்டு. தேர்தல் அடிப்படையில் தலைவர் தெரிவு நிகழ்கின்றதனால், சமுதாயத்திலுள்ள திறமை மிக்கவர்களும், நிபுணர்களும் இத்தேர்விற்கு முற்படமாட்டார்கள் அதன் காரணமாக அவர்களுடைய சேவை நாட்டிற்கோ சமுதாயத்திற்கோ கிடையாமற் போய்விடும். எனவே தலைவர் தெரிவில் ஜனநாயகமுறையையும் ஓர் சிறிதளவு சர்வாதிகார முறையையும் இணைத்து தெரிவு செய்தல் சிறப்பாகும். இதன் படி திறமைமிக்கவர்களை தெரிந்தெடுத்து நியமித்து அவர்களில் சிறந்தவர்களை நியமித்து நியமனம் பெற்றவர்களை பின்பு மக்களுடைய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்தலாகும், இப்படியானமுறையை பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் மாணவ தலைவர் தெரிவிற்கு உபயோகிப்பது சிறந்ததாகும்.

வகுப்பாசிரியர்கள் சில இலட்சியர்களுக்கு புள்ளிகள் இட்டு மாணவர்களை நியமிப்பார்கள். பின்பு பாட ஆசிரியர்களும், வகுப்பாசிரியர்களும் ஒத்து பின் அங்கீகரிப்பார்கள். மூன்றும்படியாக தெரிவு செய்யப்பட்டவர்களுடைய பட்டியலை மாணவர்களின் அங்கீகாரத்திற்கு விடவேண்டும். அதில் மிக அதிகப்படியான வாக்குப் பெற்றவர்களை தெரிவு செய்தல் வேண்டும். நியமிக்கப்பட்ட தலைவர்களில் மிக அதிகமான வாக்குப்பெற்றவர்களை இறுதியில் தலைவர்களாக தெரிவு செய்வார்கள். இதுவே சிறந்த முறையென பரீட்சார்த்தமாக பல சர்வகலாசாலைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

---


**சங்கங்களின் அங்கத்தவர்கள்,**
**பணியாளர்கள், கற்பகம் வாசகர்கள், எழுத்தாளர்கள் ஆகிய**
**அனைவருக்கும் எமது உளம் கனிந்த**

## தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

**கற்பகம்.**


---

## குழுத் தலைவர்களுக்கு அவசியமான சில குணாயியல்புகள்.

**கவனித்தல்:-** குழு அங்கத்தவர் மீது தனித்தும் ஒருமித்தும் கவனம் செலுத்துதல். அவர்கள் மீது உண்மையான அக்கறை காட்டல். அவர்களைத் தேவை என்றும் அவர்கள் விரும்பிக் கவனிக்கப்படுகின்றார்கள் என்பதை அவர்கள் உணரச் செய்தல்.

**நம்பிக்கை:-** அங்கத்தவர்கள் மீது பொறுப்பும் நம்பிக்கையும் காட்டல், அவர்களுக்கு நல்ல நோக்கு உண்டு என்பதில் நம்பிக்கை வைத்தல்.

**உந்துதல்:-** தொடர்ச்சியாக அங்கத்தவர்களின் தேவைகளை அறிந்து அவைகளை நிறைவேற்றல், தேவைகளின் முதன்மையானவைகளை அறிந்து செயலாற்றல்.

**பகிர்தல்:-** அதிகாரத்தைப் பகிர்தல் வழங்குதல், தீர்மானங்களை எடுக்கும் அதிகார அதிகாரத்தைப் பங்கிடுதல் விருப்பங்களை அறிதல், கூட்டு முயற்சிக்கு ஒரு சுமூகமான சூழ்நிலையை உருவாக்குதல், சம்பந்தப்படுதல் ''நாம்'' என்ற உணர்வை ஏற்படுத்தல்.

**செயலாற்றுதல்:-** முன் மாதிரியாக இருத்தல் செயலாற்றுமிடத்தில் இருத்தல் வேலைப்பழுவின் ஒரு பகுதியை ஏற்றல்.

**ஊக்கமளித்தல்;-** பலப்படுத்தல் தோல்வியிலிருந்தும் தோல்விகளினாலும் அறிவடைதல், நிதானமான மனோநிலையை நிலைநாட்டல்.

**போற்றுதல்:-** அங்கத்தவர்கள் முன்னிலையிலும் தனிமையிலும் போற்றுதல். தட்டிக்கொடுத்து ஊக்குவித்தல்.

**தொடர்பு கொள்ளல்;-** எல்லோருக்கும் தகவல்களைப் பரிமாறல், தகவலை வழங்கவும் ஏற்கவும் ஊக்குவித்தல் எல்லா வழித்தொடர்பு முறைகளையும் உபயோகித்து மீளறிவைத் தேடல் மதிப்பிடுதல்.

**சமூக முறையில் இணைதல்:-**

சம்பிரதாயப்படியும் தனியாகவும் அங்கத்தவரோடு நேர்முக சந்திப்பை உண்டுபண்ணல் அங்கத்தவர் இல்லங்களுக்குச் சென்று பழகுதல், முடிந்தவரை அவர்களை விருந்தினராக அழைத்து அளவளாவுதல், அங்கத்தவர்களிடையும் அவர்கள் குடும்பங்களிடையும் பரஸ்பர சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்,

நிர்வகித்தல்:- கொள்கைகளையும் இலட்சியங்களையும் வகுத்து திட்டமிட்டு நிரல்படுத்தி ஒழுங்குசெய்து பணம் வழங்கி வரவு செலவு வகுத்து கட்டுப் படுத்தி மேற்பார்வை செய்தல்,

ஒழுங்கை நிலைநாட்டல்:- அடக்கு முறை அல்லாத வழியில் ஒற்றுமை மூலம் ஒழுக்கத்தை நிலைநாட்டல் சுயகட்டுப்பாட்டை ஊக்குவித்தல்,

விளம்பரப்படுத்தல்:- குழுவின் கருமங்களை சமூக தேசிய அடிப்படையில் மக்கள் உணரச் செய்தல் அங்கத்தவர்களுக்கு தாங்கள் ஒரு பெறுமதி வாய்ந்த குழுவின் பெறுமதியான அங்கத் தினர் என்ற எண்ணத்தை ஏற்படுத்தல்.

உணர்ச்சியூட்டல்:- இலட்சிய மூலம் உயர் குறிக் கோள் மூலமும், பாரம்பரியங்கள் மூலமும், வைபவங்கள் மூலமும் நல்ல நோக்கங்கள் மூலமும். ஊக்கி உணர்ச்சியூட்டல் ஆர் வத்தை ஏற்படுத்தல் அங்கத் துவம் வகிப்பதில் ஒரு பெருமை ஏற்படச் செய்தல். ஆத்மீக இன்பத்தை ஏற்படுத்தல்,

அறைகூவல்:- துணிதல் தகமை களை உயர்த்த உதவு தல் குழுவின் திறமையில் நம் பிக்கை வைத்தல். மேலும் தீரச் செயல்களில் ஈடுபடல் எல் லாரையும் விரும்பி செயலாற்றச் செய்தல்,

புதுப்பித்தல்;- மாற்றங்களுக்கு இசைதல், குறிக் கோள்களை மீளாய்வு செய்தல் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்து புணருத்தாரணம் செய்தல்

இன்புறல்:- அங்கத்தவர் தங்க ளுக்கும் குழுவுக்கும் பணிபுரித லில் ஓர் இன்பம் காணச்செய்தல்

மீளாய்வுசெய்தல்:- எப்போதும் நிகழ்வனவற்றை அவதானித் தல் உணர்வோடிருந்து செயலுக் கும் குறிக்கோளுக்கும் இடையில் உள்ள வெளியை அவதானித்தல்

கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத் தல்: பொறுப்புணர்ச்சி நேர்மை நல்லொழுக்கம், பரந்த மனப்பான்மை, உறுதியான சிந் தனை, முகமலர்ச்சி, விசுவாசம் கடமை, ஆகியவற்றை அடிப் படையாகக் கொண்டு எடுத்துக் காட்டாக திகழுதல்.

---

**பலம்**

**யானைக்குப் பலம் தும்பிக்கை**
**மனிதனுக்குப் பலம் நம்பிக்கை**

# பாம்போஷா

## Palmposha

Nutritious Meal for the Family



INGREDIENTS BLACK GRAM ODIYAL GREEN GRAM RICE SOYA MILK & SUGAR

NETT WT 500g

METHOD MIX PALMPOSHA WITH THE SUFFICENT QUANTITY OF HOT MILK OR WATER TO THE REQUIRED CONSISTENCY IF NECESSARY ADD SUGAR TO TASTE

BEST BEFORE

PRODUCT OF
PALMYRAH
DEVELOPMENT BOARD
SRI LANKA

பனை அபிவிருத்திச் சபை தயாரித்து வழங்கும் தரமான சத்துணவு.

## சகல கற்பகம் விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றன.

**வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்**

தொடர்பு :-

தலைமை அலுவலகம்,
பனை அபிவிருத்திச் சபை,
இல. 47, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

உமா பிறிண்டேர்ஸ், 32, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர்,